தினமணி

## தலையங்கம்:விவசாயத்துக்கு அப்"பால்'...

First Published : 01 Mar 2010 12:00:00 AM IST
Last Updated : 05 Mar 2010 02:16:57 AM IST

இந்திய விவசாயத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாகவும், விவசாயிகளின் வாழ்வில் பிரிக்க முடியாத ஓர் உறவாகவும் தொடர்வது கால்நடைப் பராமரிப்பு. சமீபகாலமாக, விவசாயம் பின்னடைவுகளைச் சந்தித்துவரும் வேளையிலும், இந்தியாவில் பால் உற்பத்தி கணிசமாக அதிகரித்திருக்கிறது என்பதும், இறைச்சி ஏற்றுமதியும் கடந்த ஆண்டுகளைவிட அதிகரித்திருக்கிறது என்பதும் வெளியில் பேசப்படாத வெற்றிகள்.
இந்தியாவின் மொத்த பால் உற்பத்தி, 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இரண்டு பங்கு அதிகரித்திருக்கிறது. அதுமட்டுமா? 2007-08-ம் நிதியாண்டுக்கான புள்ளிவிவரப்படி, அரிசி (ரூ. 95,038 கோடி), கோதுமை (ரூ. 71,579 கோடி), கரும்பு (ரூ. 33,691 கோடி) ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பைவிட, பால் உற்பத்தியின் மதிப்பு (ரூ. 1,62,136 கோடி) அதிகம். சொல்லப்போனால், இந்தியாவின் மிகப்பெரிய விவசாய வளம் எது என்று கேட்டால், பால்வளமாகத்தான் இருக்கும்.

இவ்வளவு இருந்தும், பால் உற்பத்தியும், கால்நடைப் பராமரிப்பும் நமது அரசின் சிறப்புக் கவனத்தைப் பெறவில்லை என்பது மட்டுமல்ல, விவசாயிகள் மத்தியிலும் பெற வேண்டிய முக்கியத்துவம் கிடைக்கப் பெறாமல் தொடர்கிறது. விவசாயிகள் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியை, விவசாயத்துடன் இணைந்த அல்லது விவசாயம் சார்ந்த ஒன்றாகத்தான் கருதுகிறார்களே தவிர, முன்னுரிமை பெற்ற ஆதாயம்தரும் செயல்பாடாக ஏனோ கருதுவதில்லை.
அரை நூற்றாண்டுக்கு முந்தைய இந்தியச் சூழலில், கிராமங்களைச் சுற்றிலும் ஏராளமான மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. மாடு அல்லது ஆடு மேய்ப்பது என்பதேகூட ஒரு பிழைப்பாக இருந்த காலம் உண்டு. நெல் பயிரிடும்போது கிடைக்கும் துணைப்பொருளான வைக்கோலுக்கு மிகவும் குறைவான விலைதான் கிடைத்தது என்பதுடன், விவசாயியைப் பொறுத்தவரை வயலில் கிடைத்த வைக்கோலை வீணாக்காமல் உபயோகிப்பதற்குக் கால்நடை வளர்ப்பு என்கிற நிலைமை இருந்த காலம் அது.

இன்றைய நிலைமை அதுவல்ல. விளைநிலங்கள் குறைந்து வருகின்றன என்பதுடன், அதிகரித்த கரும்பு, வாழை போன்ற பணப்பயிர் விவசாயம், வைக்கோல் விலையை அதிகரித்து விட்டிருக்கிறது. மக்கள்தொகைப் பெருக்கமும், வளர்ச்சிப் பணிகளும் மேய்ச்சல் நிலங்களை வெகுவாகக் குறைத்து விட்டிருக்கின்றன.
இந்த நிலையில், கால்நடைப் பராமரிப்புக்காக அத்தியாவசியத் தேவைகள் என்று கருதப்படும், புல், வைக்கோல், கால்நடைத் தீவனம் போன்ற எல்லாமே இலவசமாக இருந்ததுபோய் ஒரு செலவினமாக மாறிவிட்டிருக்கிறது. பராமரிப்பு தவிர வேறு எந்தவிதச் செலவும் இல்லாமல் நடத்தப்பட்டு வந்த கால்நடை வளர்ப்பு என்பதை இனிமேல் நினைத்துப் பார்க்க முடியாது என்கிற நிலைமை. இனிமேல், பால் உற்பத்தியையும், கால்நடை வளர்ப்பையும் ஒரு முழுநேரத் தொழிலாக அல்லது விவசாயத்துக்கு நிகரான முக்கியத்துவமுள்ள ஒரு தொழிலாக இந்திய விவசாயி கருதியாக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

பால் உற்பத்திக்காகவே புல் வளர்ப்பு, கால்நடைகளின் மருத்துவப் பராமரிப்பு, கால்நடைத் தீவனங்கள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றில் கவனம் செலுத்துவது என்பது விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் விவசாயிகள் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும். பால் உற்பத்தியை அதிகரிக்க அதிக அளவில் பால் சுரக்கும் பசு

மற்றும் எருமை இனங்களை வாங்குவதில் முதலீடு செய்வதுடன் நின்றுவிடாமல், புல், வைக்கோல், மருந்துகள், கால்நடைத் தீவனங்கள் ஆகியவற்றிலும் முதலீடு செய்தால்தான், கால்நடை வளர்ப்பு என்பது பயனளிப்பதாக இருக்கும்.
பால் உற்பத்தியிலும், கால்நடைப் பராமரிப்பிலும் 40 ஆண்டுகளுக்கு முன்பு அரசு காட்டிய ஆர்வம்தான் இன்று பால் உற்பத்தி, ஏனைய விவசாய உற்பத்திகளைவிட அதிகமாக இருப்பதன் காரணம். கடந்த 30 ஆண்டுகளாக, நாம் தனியார் கால்நடைப் பண்ணைகளை ஊக்குவிப்பதில் காட்டும் முனைப்பை, கால்நடைப் பராமரிப்பை ஒரு தனிப்பட்ட விவசாயியை முன்னிறுத்தித் தருவதில் காட்டாமல் விட்டிருக்கிறோம்.

கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் என்பது கிராமத்துக்கு கிராமம் அமைக்கப்பட்டு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் பரவலாகக் கலப்பின கறவை மாடுகளை வாங்கவும், பராமரிக்கவும் கடனுதவி வழங்கப்பட்டு எழுபதுகளில் "வெள்ளைப் புரட்சி' என்கிற பெயரில் பால் உற்பத்திப் பெருக்கத்துக்கு வழிகோலியதை நாம் மறந்து விட்டோம் என்றே தோன்றுகிறது.
இன்றைய நிலையில் தேசிய அளவிலான பால் உற்பத்தி என்பது சுமார் 100 மில்லியன் டன்கள். இதில் பால் பண்ணைகளின் பங்கு வெறும் 15 விழுக்காடுதான். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சேகரிக்கப்படும் பாலின் அளவு வெறும் 9 மில்லியன் டன்கள் மட்டுமே. இன்னொரு புள்ளிவிவரம்கூட இருக்கிறது. தேசிய அளவிலான பால் உற்பத்தியின் சரிபாதி, குஜராத் மாநிலத்தின் ஆனந்த் கூட்டுறவு பால் உற்பத்தி சங்கமும், கர்நாடக அரசின் நந்தினி பால் பண்ணையும் தரும் பங்களிப்பு.

கூட்டுறவு முறையில் பால் பண்ணைகள் கிராமம்தோறும் அமைப்பதும், அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை அந்தச் சங்கங்களுடன் இணைந்து கால்நடைகளின் மருத்துவத் தேவைகளையும், இனப்பெருக்கத் தேவைகளையும் பூர்த்தி செய்வதும், கால்நடைப் பராமரிப்பை ஒரு விவசாயத் தொழிலாகக் கருதி வங்கிகள் கடனுதவி வழங்குவதும்தான் பால் உற்பத்தி பெருகுவதற்கும், பாலின் விலை கட்டுக்குள் அடங்கி இருப்பதற்கும் உத்தரவாதம் அளிக்கும். சில தனியார் பண்ணைகள், இடைத்தரகர்கள் மூலம் பால் சேகரிப்பது, அரசுப் பண்ணைகள் தாங்களே கால்நடைகளை வளர்ப்பது போன்ற போக்கு பாலின் விலையை அதிகரிக்க மட்டுமே உதவும்.

கால்நடைகளின் பராமரிப்பில் விவசாயிகளை அதிக கவனம் செலுத்த ஊக்குவிப்பது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் உற்பத்தி மற்றும் சேகரிப்பை உறுதிப்படுத்துவது, வங்கிகளின் பங்களிப்பு ஆகியவை நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல முடுக்கிவிடப்பட்டால், உலகத்துக்கே பால் விநியோகம் செய்யும் நிலைமைக்கு இந்தியா உயர முடியும். சராசரி இந்திய நகர்ப்புறவாசிக்குக் குறைந்த விலையில் பால் கிடைக்கவும் வழிகோல முடியும்...
விழித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது!

## விவசாயிகளுக்கு ரூ.18 லட்சம் இலவச இடுபொருள்கள்

First Published : 05 Mar 2010 02:11:08 AM IST

கிருஷ்ணகிரி, மார்ச் 4: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.18 லட்சம் மதிப்பிலான இலவச இடுபொருள் வழங்கப்பட உள்ளது என வேளாண் இணை இயக்குநர் ராஜன் கூறினார்.
கிருஷ்ணகிரி வேளாண் விரிவாக்க மையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இடுபொருள்கள் வழங்கும் விழாவில் அவர் பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சம்பா மற்றும் நவரை பட்டங்களில் குறைந்தது 27,500 ஹெக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 10 வட்டங்களில் மட்டும் 18,000 ஹெக்டேர் பரப்பளவில் செம்மைநெல் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக கிருஷ்ணகிரி அணை, சின்னாறு அணை, பாம்பாறு அணை, கெலவரப்பள்ளி அணை மற்றும் பாரூர் பெரிய ஏரி பாசனப் பகுதிகளில் குறித்த காலத்தில் நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.
விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் நடப்பு ஆண்டில் எல்லா விவசாயிகளுக்கும்
செம்மை நெல் சாகுபடிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மதிப்பில் இலவசமாக 8 கிலோ விதை, உயிர் உரங்கள் 20 பொட்டலங்கள், யூரியா 50 கிலோ, பயிர் நடவு அளவுக் கருவி, நுண்ணூட்டச் சத்து 12.5 கிலோ ஆகியவை வழங்கப்படுகின்றன.
மாவட்டத்தில் ரூ.18 லட்சம் மதிப்பிலான இடுபொருள்களை இலவசமாக வழங்க அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

### விவசாயிகள்-வேளாண் நிபுணர்கள் சந்திப்பு

First Published : 05 Mar 2010 02:10:54 AM IST

கிருஷ்ணகிரி, மார்ச் 4: கிருஷ்ணகிரி அருகே நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் விவசாயிகள், வேளாண் நிபுணர்கள் சந்திப்பு வியாழக்கிழமை நடைபெற்றது.
காவேரிப்பட்டணம் அருகே உள்ள சின்னகால்வேஅள்ளி கிராமத்தில், கிருஷ்ணகிரி டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பில் நடைபெற்ற இந்சந்திப்பில் கால்வேஅள்ளி மற்றும் சோக்காடு உழவர் மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.
இந்நிகழ்ச்சியில் வாழையில் பின்பற்றபட வேண்டிய நவீன தொழில் நுட்பங்கள், சந்தைப்படுத்துதல், உழவர் மன்றத்தின் செயல்பாடுகள் குறித்து தொழில்நுட்ப வல்லுநர் ரமேஷ்பாபு விளக்கமளித்தார். மேலும் விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து நிபுணர்கள் பேசினர்.
உழவர் பயிற்சி மன்றத்தின் வேளாண் உதவி இயக்குநர் விடுதலை, வேளாண் அலுவலர்கள் முருகன், காந்தி, தொழில்நுட்ப வல்லுநர்கள் பூமதி, செந்தில்குமார் உள்ளிட்டோர்
பங்கேற்றனர்.

### அக்மார்க் தரச்சான்று இல்லாத தேயிலைதூளை விற்க தடை விதிக்க கோரிக்கை

First Published : 05 Mar 2010 01:16:17 AM IST

உதகை,மார்ச்.4: நீலகிரி மாவட்டத்தில் தேநீர் கடைகளிலும், தேயிலைத்தூள் விற்பனையகங்களிலும் உள்ள தேயிலையின் தரத்தைக் குறித்து ஆய்வு நடத்துவதோடு, அக்மார்க் தரச்சான்று இல்லாத தேயிலைத்தூளை விற்பனை செய்யக்கூடாது என தமிழக அரசு உத்தரவிட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்கத்தின் செயலர் ஜனார்த்தனன், தேயிலை வாரிய செயல் இயக்குநருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:
நீலகிரி மாவட்டத்திலுள்ள உணவகங்கள், தேநீர் கடைகள் மற்றும் விற்பனையகங்களில் கலப்பட தேயிலைத்தூள் விற்பனை கடந்த பல ஆண்டுகளாகவே நடைபெற்று வருகிறது. கலப்படத் தேயிலை மனிதர்களை மெல்ல கொல்லும் விஷம் என்பது யாவரும் அறிந்ததே. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்ற தேயிலை வாரியத்தின் அறிவிப்பு இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு பதிலாக ஒதுங்கிக் கொள்வதைப்போல அமைந்துள்ளது.
எனவே இப்பிரச்சினை தொடர்பாக சுகாதார அலுவலர், விற்பனை அலுவலர் என ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். இக்குழுவினர், மாவட்டத்திலுள்ள அனைத்து தேநீர் கடைகள், தேயிலைத்தூள் விற்பனையகங்கள் ஆகியவற்றில் திடீர்

ஆய்வுகளை நடத்தி முறைகேடுகளில் ஈடுபடுவோரை கலப்படப் பொருட்கள் தடுப்பு சட்டத்தின்படி கைது செய்ய வேண்டும்.

பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரும் அதே நேரத்தில், கலப்படத் தேயிலை குறித்து புகார்கள் வழங்கப்பட்டதன் பின்னணியில் எத்தனை தேநீர் கடைகள் மற்றும் விற்பனையகங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இந்த கோரிக்கையை அலட்சியப்படுத்தும்பட்சத்தில் கலப்படத் தேயிலையின் புகலிடம் என்ற பெயர் புகழ்பெற்ற சுற்றுலா மையமான நீலகிரிக்கு வந்துவிடும். எனவே, அக்மார்க் தரச்சான்று இல்லாமல் தேயிலைத்தூளை விற்பனை செய்யக்கூடாது என்ற அறிவிப்பை தமிழக அரசு வெளியிடுவதற்கு தேயிலை வாரியமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் அந்த மனுவில் ஜனார்த்தனன் குறிப்பிட்டுள்ளார்.

## அங்கன்வாடி மையங்களில் காய், கனித் தோட்டம் அமைக்கும் திட்டம் தொடக்கம்

First Published : 05 Mar 2010 06:25:27 AM IST

திருவாரூர், மார்ச் 4: திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் காய், கனித் தோட்டங்கள் அமைக்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன், குடவாசல் வட்டம், திரியம்பாகபுரம் அங்கன்வாடி மையத்தில் வியாழக்கிழமை தொடக்கிவைத்தார்.

இந்தியாவிலேயே முன்னோடியாக திருவாரூர் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட இத் திட்டத்துக்கு மத்திய அரசின் வறுமை ஒழிப்புக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 200 அங்கன்வாடி மையங்களில் காய், கனித் தோட்டம் அமைக்க ரூ.23.60 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், பெரும்பண்ணையூர் ஊராட்சிக்குள்பட்ட திரியம்பாகபுரம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தையொட்டிய ஒரு சென்ட் நிலத்தைப் பன்படுத்தி, அதில் வாழை, கத்தரி, பப்பாளி, கருவேப்பிலை, வெண்டை உள்ளிட்ட காய், கனிப் பயிர்கள் நடவு செய்து தொடக்கிவைக்கும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் இத் திட்டத்தைத் தொடக்கிவைத்து ஆட்சியர் அளித்த பேட்டி:

அங்கன்வாடி மையங்களில் ஏற்கெனவே சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், சில குழந்தைகள் உடல் எடைக் குறைவு காரணமாக பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சிறப்பு சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த குறைகளைப் போக்கும் வகையில் இயற்கை உரங்களைக் கொண்டு விளைவிக்கும் தரமான, தோட்டக் காய், கனிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் சரியான எடை மற்றும் நல்ல ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் திருவாரூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட அங்கன்வாடி பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் உரிய ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. ஜான்லூயிஸ், வேளாண் இணை இயக்குநர் சொ. அன்பழகன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் இளங்கோ, குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ராமசாமி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பி. ஜெயராணி, ஊராட்சிமன்றத் தலைவர் ஜெயராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோடை நெல் சாகுபடியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்**

First Published : 05 Mar 2010 06:25:08 AM IST

மன்னார்குடி, மார்ச் 4: காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது நிலவி வரும் அறிவிக்கப்படாத மின் வெட்டால் கோடை நெல் சாகுபடி பாதிக்கப்படுவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வருக்கு திருவாரூர் மாவட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வியாழக்கிழமை சங்க நிர்வாகிகள் எஸ். ஜயகுமார், என்.வி.சுந்தரம், என்.தசரதன், வி.சாம்பசிவம் அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பது:

டெல்டா மாவட்டங்களில் தற்பொழுது கோடை நெல் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், அறிவிக்கப்படாத மின் வெட்டு காரணமாக மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டு பல இடங்களில் மின் மோட்டார்கள் பழுதாகி சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மன்னார்குடி, நீடாமங்கலம் பகுதிகளில் பகலில்
6 மணி நேரமும், இரவில் 4 மணி நேரமும் வழங்கப்படும் மும்முனை மின் விநியோகத்தை தடையில்லாது ஒரே நேரத்தில் வழங்கவும், டெல்டா மாவட்டம் முழுவதும் விவசாயப் பணிக்கு தினசரி 20 மணி நேரம் மின் விநியோகம் செய்து கோடை சாகுபடிக்கு உதவ சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு முதல்வர் உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோரிக்கை மனுவில் உள்ளிட்டோர் கையெழுத்திட்டு உள்ளனர்.

**விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம் உறுப்பினர்கள் கவனத்துக்கு...**

First Published : 05 Mar 2010 02:21:25 AM IST

திருப்பூர், மார்ச் 4: தமிழ்நாடு விவசாயிகள் சமூக பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள விவசாயிகள் தங்களது உறுப்பினர் அட்டையைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்று, மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலனுக்காக தமிழ்நாடு விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 22.12.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் கீழ் பயனாளிகள் திருமண உதவித்தொகையாக ஆண்களுக்கு ரூ.3 ஆயிரமும், பெண்களுக்கு ரூ.5 ஆயிரமும் வழங்கப்படுகிறது.
÷இயற்கை மரணம் அடைந்தால் ரூ12 ஆயிரத்து 500-ம், விபத்து மூலம் இறந்தால் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 500-ம், முதியோர் உதவித்தொகையாக மாதம் ரூ.400-ம் வழங்கப்படுகிறது.

÷இத் திட்டத்தின்கீழ் இதுவரை 75 லட்சத்து 63 ஆயிரத்து 666 குடும்ப அட்டைகள் பெறப்பட்டு ஒரு கோடியே 73 லட்சத்து ஆயிரத்து 325 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சமூக பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்தவர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும்.

இப்போது 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் உறுப்பினர்கள் தங்களது பதிவுஅட்டையை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். எனவே, இத்திட்டத்தில் உறுப்பினராக இருக்கும் விவசாயிகள் தங்களது பதிவுஅட்டையை உடனடியாக புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 20 சத ஈரப்பதம் அனுமதிக்கப்படும்**

First Published : 05 Mar 2010 06:24:08 AM IST

நாகப்பட்டினம், மார்ச் 4: நாகை மாவட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 20 சத ஈரப்பதம் அனுமதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என நாகை மாவட்ட ஆட்சியர் (பொ) ஆ. அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாகை மாவட்டத்தில் தற்போது 233 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதைத் தவிர, சிறப்பு கொள்முதல் குழுத் திட்டம் மூலமும் நெல் கொள்முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 1.90 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு மார்ச் 2-ம் தேதி வரை 17 சத ஈரப்பதம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. தற்போது, விவசாயிகளின் நலன் கருதி ஈரப்பத சதத்தை 20-ஆக உயர்த்தி அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவு, நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இனிவரும் காலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் கொள்முதலின் போது 20 சத ஈரப்பதம் அனுமதிக்கப்படும் என்றார் அவர்.

**கோடை நெல் சாகுபடியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்**

First Published : 05 Mar 2010 06:25:08 AM IST

மன்னார்குடி, மார்ச் 4: காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது நிலவி வரும் அறிவிக்கப்படாத மின் வெட்டால் கோடை நெல் சாகுபடி பாதிக்கப்படுவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வருக்கு திருவாரூர் மாவட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வியாழக்கிழமை சங்க நிர்வாகிகள் எஸ். ஜயகுமார், என்.வி.சுந்தரம், என்.தசரதன், வி.சாம்பசிவம் அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பது:

டெல்டா மாவட்டங்களில் தற்பொழுது கோடை நெல் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், அறிவிக்கப்படாத மின் வெட்டு காரணமாக மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டு பல இடங்களில் மின் மோட்டார்கள் பழுதாகி சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மன்னார்குடி, நீடாமங்கலம் பகுதிகளில் பகலில்
6 மணி நேரமும், இரவில் 4 மணி நேரமும் வழங்கப்படும் மும்முனை மின் விநியோகத்தை தடையில்லாது ஒரே நேரத்தில் வழங்கவும், டெல்டா மாவட்டம் முழுவதும் விவசாயப் பணிக்கு தினசரி 20 மணி நேரம் மின் விநியோகம் செய்து கோடை சாகுபடிக்கு உதவ சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு முதல்வர் உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோரிக்கை மனுவில் உள்ளிட்டோர் கையெழுத்திட்டு உள்ளனர்.

**தேங்காய்களை கொள்முதல் செய்ய வேண்டும்**

First Published : 05 Mar 2010 01:08:45 AM IST

பொள்ளாச்சி, மார்ச் 4: கேரளத்தைப் போலத் தமிழகத்திலும் தேங்காய்களைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று, பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே.சுகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் பொள்ளாச்சிப் பகுதியில்தான் அதிக அளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தேங்காய் உற்பத்திச் செலவை விட விற்பனை விலை மிகக் குறைவாக உள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் மிகுந்த

கவலையடைந்துள்ளனர்.  உரம், கூலி உள்ளிட்ட செலவுகள் மிக அதிக அளவில் உயர்ந்துள்ளன. ஆனால் தேங்காய் விலை மிகக் குறைவாக உள்ளது. இதற்காக மத்திய அரசு ஆதார விலையாக தேங்காய் கொப்பரையை கிலோ ரூ.44.50-க்குக் கொள்முதல் செய்கிறது. ஆனால் தேங்காய் கொப்பரை தயாரிக்க விவசாயிகளால் முடிவதில்லை.
எனவே கொப்பரைக்குப் பதிலாகத் தேங்காயைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலமான கேரளத்தில் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் நேரடியாகப் பலன்களை அனுபவிக்கின்றனர்.  ஆனால் தமிழகத்தில் கொப்பரையைக் கொள்முதல் செய்வதால் வியாபாரிகளே பலனை அனுபவிக்கின்றனர். எனவே மத்திய அரசு இப்பிரச்னையில் தலையிட்டு, கொப்பரைக்குப் பதிலாகத் தேங்காயைக் கொள்முதல் செய்ய உத்தரவிட வேண்டும்.

### "ஐஸ்கிரீம்' தயாரிப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி

First Published : 05 Mar 2010 03:54:57 AM IST

சென்னை, மார்ச் 4: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் "ஐஸ்கிரீம்' தயாரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சியை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.
இந்தப் பயிற்சி வரும் மார்ச் 10}ந்தேதி சென்னை நகர்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மையத்தில் நடைபெறுகிறது. இதில் விதவிதமான ஐஸ்கிரீம்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கான பயிற்சிக் கட்டணம் ரூ. 400 என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் பங்கேற்பவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.
இந்தப் பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள் 044}26263484 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

### வேளாண்மைத் துறை ஆணையர் ஆய்வு

First Published : 05 Mar 2010 06:11:16 AM IST

திருச்சி, மார்ச் 4: திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர், தொட்டியம் வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் வேளாண்மைத் திட்டப் பணிகள், வேளாண்மை விரிவாக்க மையப் பணிகளை மாநில வேளாண்மைத் துறை ஆணையர் எஸ். கோசலராமன் அண்மையில் ஆய்வு செய்தார்.
திருவெறும்பூர் வட்டாரத்தில் உள்ள அரசங்குடி கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுவால் நடத்தப்படும் சந்தனம் உயிரி இடுபொருள் உற்பத்தி மையத்தைப் பார்வையிட்டார்.
மேலும், அங்குள்ள மகளிரிடம் உற்பத்தி செய்யும் முறைகள், சந்தைப்படுத்தும் முறைகள் குறித்து கேட்டறிந்தார். தொட்டியம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு 50 சதம் மானிய விலையில் வழங்க உள்ள 128 டன் ஜிப்சம், உழவர் ஆர்வலர் குழு மூலம் செயல்படுத்தப்படும் செம்மை நெல் சாகுபடிக்கு ரூ. 7,400 மதிப்புள்ள 5 கோனோவீடர், 1 மார்க்கர் என்ற அளவில் 10 குழுக்களுக்கு வழங்கப்படவுள்ளதைப் பார்வையிட்டார்.
ஏலூர்பட்டி வருவாய் கிராமத்துக்கு உள்பட்ட அழியாபுரம் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நடவு செய்யப்பட்டுள்ள கோ.ஆர்.ஹெச். 3 வீரிய ஒட்டு நெல் விதைப் பண்ணையை ஆய்வு செய்தார்.  வல்லுநர் விதைக் கொண்டு விதைப்பு செய்யப்பட்ட ஆடுதுறை 43 விதைப் பண்ணையைப் பார்வையிட்டார். அரசுப் பண்ணை மூலம் உற்பத்தியாகும் ஆதார விதைக்குரிய விலையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயிகளுக்கு ஊக்கமளித்தார். ஆய்வின் போது, மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ந. பொன்னுசாமி, துணை இயக்குநர்கள் வெ. ராம்குமார், சு. சிவராஜ், உதவி இயக்குநர்கள் வீ. சந்திரசேகரன், ரவி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

## விவசாயிகளுக்கு வயல்வெளி கருத்தரங்கம்

குன்னம் : குன்னம் அருகே உள்ள சித்தளியில் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் மத்திய அரசின் பயிர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பருத்தி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு வயல்வெளி கருத்தரங்கம் நடந்தது.
பேராசிரியர் கதிரவன் வரவேற்றார். சித்தளி ஊராட்சி தலைவர் இந்திரா முன்னிலை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்து பேசுகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு 23ஆயிரம் எக்டேரில் பிடி பருத்தி சாகுபடி செய்யப்பட்டு,வேளாண் அலுவலர்களின் அறிவுரையின்படி சாகுபடி செய்தவர்கள் அதிக லாபம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் பருத்தி ரூ.2 ஆயிரத்து 300க்கு விற்றது. ஆனால் இந்த ஆண்டு ஒரு குவிண்டால் ரூ.3ஆயிரத்து300க்கு விற்கப்படுகிறது என்றார்.
பருத்தி ஆராய்ச்சி மைய தொழில்நுட்ப வல்லுனர் கவிமணி, உதவி இயக்குனர் அண்ணாதுரை, பேராசிரியர் சங்கர் மற்றும் வேளாண்துறை பணியாளர்கள் ரெங்கராஜ், சுப்பிரமணியன், நாகராஜன், செல்வராஜ், அண்ணாமலை உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் மணி நன்றி கூறினார்.

## மூலிகை தாவர தேவை அதிகரிப்பு தாவரவியல் விஞ்ஞானிகள் தகவல்

கீழ்ப்பாக்கம் : ""ஆங்கில மருத்துவத்தின் பக்க விளைவுகளை அனைவரும் உணர்ந்துள்ளதால், மூலிகை தாவரங்கள் தேவை அதிகரித்து வருகிறது,'' என, மருத்துவ தாவரங்கள் தொடர்பான கருத்தரங்கில், தாவரவியல் விஞ்ஞானிகள் வலியுறுத்தினர்.
மருத்துவ தாவரங்கள் வளர்ப்பு மற்றும் மூலிகை மருத்துவம் தொடர்பான தேசிய கருத்தரங்கம், பச்சையப்பன் கல்லூரியில் நேற்று துவங்கியது. கல்லூரி முதல்வர் ருக்மணி வரவேற்றார். பச்சையப்பன் அறக்கட்டளை தலைவர் மற்றும் வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ், விழா புத்தகத்தை வெளியிட்டார். மூலிகை மருத்துவம், மருத்துவ தாவரங்களின் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள், தீர்வுகள் குறித்து பல்வேறு நாடுகள் மற்றும் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களில் இருந்து, வந்திருந்த அறிவியல் அறிஞர்கள் பேசினர்.
இது குறித்து, பச்சையப்பன் கல்லூரி தாவரவியல் பேராசிரியர் சேகர் பேசியதாவது: ஆங்கில மருத்துவத்தின் பின் விளைவை அனைவரும் உணர்ந்துள்ளதால், மூலிகை மருத்துவத்தை அதிகளவில் பின்பற்றுகின்றனர். எனவே, மூலிகைத் தாவரங்களின் தேவை அதிகரித்து வருகிறது. மூலிகைத் தாவரங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் வாழ்விடம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லையெனில் அழிந்துவிடும் என்றார்.

## விவசாயிகளுக்கு நிலுவைத்தொகை

பொள்ளாச்சி : கேரளா மாநிலம் சித்தூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்கப்படுகிறது என்று கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆலை செயலாளர் (பொறுப்பு) ராமன்உன்னி அறிக்கை:ஆலைக்கு கடந்த 2000-01, 2001-02, 2002-03 ஆண்டுகளில் கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத்தொகையை வினியோகம் செய்ய கேரளா அரசு 3.84 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. கரும்பு சப்ளை செய்த விவசாயிகள், சர்க்கரை ஆலையில் இருந்து பெற்ற ரசீது,

கரும்பு எடை ரசீது, வாக்காளர் அடையாள அட்டை, வங்கி பாஸ் புத்தகம் ஆகியவற்றுடன் வரும் 2010 மார்ச் 31ம் தேதிக்குள் மேனோன்பாறையில் உள்ள சர்க்கரை ஆலைக்கு நேரில் வந்து விண்ணப்பிக்க வேண்டும். ஏற்கனவே விண்ணப்பம் கொடுத்துள்ளவர்களின் நிலுவைத்தொகை தயாராக இருந்தும் விவசாயிகள் யாரும் நேரடியாக வந்து வாங்கவில்லை. அதனால் நிலுவை தொகை பெற வேண்டியவர்கள் உடனடியாக சர்க்கரை ஆலை நிர்வாகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். மேலும் தகவலுக்கு 04923-272238 என்ற தொலைபேசி எண்ணில் சர்க்கரை ஆலை நிர்வாகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானியத்தில் கோனோவீடர் கருவி

பண்ருட்டி : விவசாயிகளுக்கு மானி யத்தில் ஜிப்சம், களையெடுக்கும் கருவிகள் விற் பனை செய்யப்பட்டு வருவதாக பண்ருட்டி வேளாண் உதவி இயக்குனர் ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் எக்டேருக்கு மூவாயிரம் ரூபாய் மானியத்தில் களையெடுக்கும் கோனோவீடர் கருவி ஒன்றும், வரிசை நடவிற்கு உதவிடும் மார்க்கர் கருவி ஒன்றும், உரம் மற்றும் உயிரியல் காரணிகளும் வழங்கப்படுகிறது.

நெல், சிறுதானியங்கள், உளுந்து, மணிலா, எள் பயிரிடும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில்  ஜிப் சம் மற்றும் ஜிங்சல்பேட் வழங்கப்படுகிறது.ஜிப்சம் மூட்டைக்கு 61 ரூபாய் மானியம் வழங் கப்படுகிறது. ஜிங்க் சல்பேட் எக்டேருக்கு 25 கிலோ வீதம், கிலோ 18 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது.மாவட்டத்தில் தொடர்ந்து பயிர் சாகுபடி செய்யும் நெல், கரும்பு, மணிலா பயிர் வகைகள், தென்னை, பருத்தி முதலான பயிர்களுக்கும் கந்தக சத்து தேவை அதிகம் உள் ளது. ஆனால் மண்ணில் தவையான கந்தகசத்து இல்லாததால் மகசூல் குறைகிறது.இதனை தவிர்த்திட  ஜிப்சம் எக்டேருக்கு பயிறுவகை பயிர்களுக்கு 110 கிலோவும், மணிலா மற்றும் நெல் பயிர்க்கு 400 கிலோவும் மானியத்தில் வழங்கப்படுகிறது.

ஜிப்சம் மற்றும் ஜிங்சல் பேட் பயிருக்கு அடியுரமாக இடுவதால் 20 சதவீத மகசூல் அதிகரிக்கும். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் தெளிப்பு நீர் பாசனக்கருவிகள் அமைக்க எக்டேருக்கு 7,500 ரூபாய் மானியத்திலும், தார்பாய் மற்றும் விதை ஊன்றும் கருவிகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.ஐசோபாம் திட்டத்தில் மணிலா டி.எம்.வி.2 ரகம் மற்றும் உளுந்து டி.9 ரகம் பண்ருட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கிலோவிற்கு 20 ரூபாய் மானியத்தில் விவசாயிகள் வாங்கி பயன்பெற அருகில் உள்ள வேளாண் அலுவலர்களை அணுகி பயன் பெறலாம்.

### அணை நீர் கிடைக்கவில்லை பழநி விவசாயிகள் புகார் : ரூ.6 கோடியில் கால்வாய் புனரமைப்பு

பழநி : பாலாறு அணையில் இருந்து வெளியேறும் தண்ணீர் முழுமையாக கிடைப்பதில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

பழநி பாலாறு பொருந்தலாறு அணையில் இருந்து வினாடிக்கு 293 கன அடி தண்ணீர் (டிசம்பர் 14 முதல்) விவசாயத்திற்காக வெளியேற்றப்படுகிறது. இடது பிரதான கால்வாய் மூலம் வெளியேறும் தண்ணீர் 30 கி.மீ., தூரத்திற்கு செல்ல வேண் டும். ஆனால் வழியில் சில குளங்களுக்கு திருப்பி விடப்படுவதால் கடைசிவரை செல்வதில்லை. தண்ணீர் வெளியேறும் ஷட்டர்கள் சில பழுதாகி உள்ளன. கால்வாயில் பல இடங்களில் பாசி படர்ந் துள்ளது.

இதனால் முழுமையாக தண்ணீர் கிடைக்காததால் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் பாதிக்கும் நிலை உள்ளதாக விவசாயிகள் ஆர்.டி.ஓ.,விடம் புகார் தெரிவித்தனர். ஆர்.டி.ஓ.,நாராயணன் தலைமையில் சமாதான

கூட்டம் நடந்தது.  பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கோபி,தாசில்தார் பெருமாள் முன்னிலை வகித்தனர். இடது பிரதான கால் வாய் பாசன விவசாயிகள் சங்க பிரமுகர்கள் உட்பட விவசாயிகள் பலர் பங் கேற்றனர்.
மார்ச் 10 முதல் 12 வரை கால்வாயில் உள்ள பாசிகள் அப்புறப்படுத்தப்படும்.அதன்பின் வெளியேறும் தண்ணீர் 30 கி.மீ., தூரத்திற்கும் முழுமையாக செல்வதை அதிகாரிகள் கண்காணிக்க வேண் டும்.  பழுதான ஷட்டர்கள் உடனடியாக சரி செய்யப்படும். இந்தாண்டு அணையில் தேவையான தண்ணீர் இருப்பதால் தேவைக் கேற்ப கூடுதலாக திறந்து விடப்படும் என கூட்டத் தில் முடிவெடுக்கப் பட்டன.   நிரந்தர தீர்வாக கால்வாய் புனரமைப்பு பணிக்கு ரூ. 6 கோடியில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பஞ்சாப் 'கினோ ஆரஞ்சு' தாண்டிக்குடியில் விளைச்சல்

தாண்டிக்குடி : பஞ்சாபில் விளையும் "கினோ' வகை ஆரஞ்சு தாண்டிக்குடியில் சோத னை அடிப்படையில் விளைந்துள்ளது.
திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடியில் சோதனை அடிப்படையில் பஞ்சாபிலுள்ள கினோ வகை ஆரஞ்சு பயிரிடப்பட்டுள்ளது.
பொதுவாக இம்மலைப்பகுதியில் கமலா, நாக்பூர் மேண் ட்ரின் உள்ளிட்ட ரகங்களை மட்டுமே விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். தற்போது கினோ வகை ஆரஞ்சை தாண்டிக்குடியைச் சேர்ந்த அலெக்சாண் டர் என்பவர் தனது தோட்டத்தில் நடவு செய்த 3 ஆண்டில் பலனுக்கு வந்துள்ளது.
இதுகுறித்து அவர் கூறுகையில்; மற்ற ஆரஞ்சுகளை காட்டிலும் இந்த வகை ஆரஞ்சு கொத்து, கொத்தாக காய்க்கும் தன்மை கொண்டது.  மார்க்கெட்டில் தனி மதிப்புள்ளதால் ஒரு கிலோ ரூ.60-க்கு விற்பனையாகிறது. வழக்கமாக பிப்ரவரி-மார்ச்சில் பூக்கள் பூத்து செப்டம்பர், அக் டோபரில் பழங்கள் பறிக்கலாம்.  சோதனை அடிப்படையில் நடவு செய்துள்ள நிலையில் நன்கு காய்க்கிறது.தொடர்ந்து இந்த வகை ஆரஞ்சை பயிரிட உள்ளேன் என்றார்.

## மதுரையில் கூட்டுறவு துறை மூலம் 500 டன் துவரம் பருப்பு கொள்முதல்

மதுரை:மதுரை மாவட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து ஐநூறு டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய கூட்டுறவு துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.விவசாயிகள் நலன்கருதியும், உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் நேரடியாக விவசாயிகளிடமே துவரம் பருப்பை கொள்முதல் செய்ய உள்ளனர்.

இதற்கான பணி முதற்கட்டமாக கள்ளிக்குடி வட்டாரம் மேலப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் நடத்தப்பட்டது. மண்டல இணைப்பதிவாளர் கே.வி.எஸ்.குமார் இத்திட்டத்தை துவக்கி வைத்தார். அவர் பேசியதாவது:மதுரை மாவட்டத்தில் தற்போது துவரை அறுவடை நடக்கிறது. இந்த ஆண்டு விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் மூலம் 500 டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கள்ளிக்குடி, டி. கல்லுப்பட்டி, பேரையூர் வட்டாரங்களில் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமும், பேரையூர், திருமால், பி.புதூர், மேலப்பட்டி, எம்.கல்லுப்பட்டி, குப்பல்நத்தம், மீனாட்சிபுரம் பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமும் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு கிலோ துவரம் பருப்புக்கு 31 ரூபாய் விவசாயிகளிடம் களத்து மேட்டிலேயே வழங்கப்படும். இப்பகுதி விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தில் குறையிருந்தால், 98424 75788, 99433 38945, 90035 91007, 98421 24447 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் நேரடி நெல் கொள்முதல் திட்டத்தில் இதுவரை, 600 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பூண்டி, அலங்காநல்லூர், அரியூர், மேட்டுப்பட்டி, கள்வேலிப்பட்டி பகுதிகளில் புதிதாக 5 கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில் துணைப் பதிவாளர் கல்யாணி, சார்பதிவாளர்கள் செண்பகராஜ், விஜயகுமார், பாலகிருஷ்ணன், முதுநிலை ஆய்வாளர் குணசேகரன், தொடக்க கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் பாண்டி, தர்மபுத்திரன், மனோகரன், சுப்புராம் கலந்து கொண்டனர்.

### 10 கால்நடை மருந்தக கிளை நிலையங்கள் தரம் உயர்வு

மதுரை:மதுரை மாவட்டத்தில் 40 கால்நடை மருந்தகங்களும், 99 கிளை நிலையங்களும் உள்ளன. கிளை நிலையங்களில் உள்ள ஆய்வாளர், காலையில் மட்டும் கால்நடைகளுக்கு தேவையான முதலுதவி சிகிச்சை அளிப்பார். மதியம் கிராமப்புறத்திற்கு "விசிட்' செல்கின்றனர். இந்நேரங்களில் அருகில் உள்ள கிராம மக்கள் கால்நடைகளுடன் கிளை நிலையங்களுக்கு வந்து ஏமாற்றம் அடைகின்றனர்.

இதை தவிர்க்க, கால்நடைகள் அதிகமுள்ள சாப்டூர், உத்தப்பநாயக்கனூர், கச்சைக்கட்டி, முடுவார்பட்டி, அச்சம்பத்து, அப்பன்திருப்பதி, சேக்கிப்பட்டி, திருவாதவூர், தெற்குவாசல், பாப்பாபட்டி ஆகிய ஊர்களில் உள்ள கிளை நிலையங்கள் மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இங்கு, டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் இயங்கும்.

### மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம் அருகே விளாச்சேரியில் மாணவிகளுக்கு, மண்புழு உரம் தயாரித்தல் செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் சார்பில் விளாச்சேரி, வேடர் புளியங்குளம், தென்பழஞ்சியில் 15 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு முழு மானியத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு, உரம் தயாரிக்கும் பணி நடக்கிறது.

அவற்றின் செயல்பாடுகள் குறித்து மதுரை கோ.புதூர் சமுதாய கல்லூரி மாணவிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப் பட்டது. விளாச்சேரி தலைவர் மரகதவல்லி தலைமை வகித்தார். திருப்பரங் குன்றம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வன், வேளாண் அலுவலர் உலகம்மாள் ஆகியோர் பேசினர்.

### விவசாயிகள் பயிற்சி முகாம்

மேலூர்: மேலூர் பகுதியில் உள்ள கொட்டகுடி, தெற்குதெரு, பூஞ்சுத்தி கிராமங்களில் விதை கிராம திட்டத்தின் மூன்றாம் கட்ட விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது. ஊராட்சிமன்ற தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற முகாமிற்கு மேலூர் வேளாண்மை உதவி இயக்குனர் கணேசன் முன்னிலை வகித்தார். பயிற்சியில் நெல், பயறு சாகுபடி செய்யும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

விதை உற்பத்தியில் அறுவடை நிலை தொழில்நுட்பங்கள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய நிலை தொழில் நுட்பங்கள் குறித்து அரசு விதைப் பண்ணை வேளாண்மை அலுவலர் ரமேஷ் பாண்டியன் பயிற்சி அளித்தார். ஒருங்கிணைந்த ஊட்டசத்து நிர்வாகம், இலை வண்ண அட்டையை பயன்படுத்துதல், டி.ஏ.பி., தெளித்தல், நுண்ணுரம் இடுதல், விதை தொழில் நுட்பங்கள் கருத்துகாட்சி மற்றும் செயல் விளக்கத்தை வேளாண் அலுவலர் கமலாலட்சுமி அளித்தார். முகாமிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் தவப்பிரியா, கீதா செய்திருந்தனர்.

**விவசாய பயிற்சி**

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஒன்றியம் நெல்லுக் குண்டுப் பட்டி கிராமத்தில், நீர், நிலவள திட்டத்தின் கீழ் நெல், சிறுதானியம், பயறுவகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.

மதுரை வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமை ஏற்றார். கொட்டாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டி, வேளாண்மை அலுவலர் ரவி, உதவி அலுவலர்கள் ரவிச்சந்திரன், பிரபு ஆகியோர் பயிற்சி அளித்தனர். மணிமுத்தாறு உபவடிநீர் பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**துவரம் பருப்பு அமோக விளைச்சல் : ரேஷனில் கூடுதல் ஒதுக்கீடு**

சிவகங்கை : துவரம் பருப்பு விளைச் சல் அதிகரித்துள்ளதால், ரேஷன் கடைகளுக்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
துவரம் பருப்பு விலை வெளிச்சந்தையில் அதிகளவு உயர்ந்ததால், ரேஷன் கடைகளில் குறைந்த விலைக்கு வினியோகம் செய்யப்பட்டது. வடமாநிலங்களில் விளைச்சல் குறைந்ததால், வெளி நாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்து வினியோகிக்கப்பட்டது. இதனால், கடைகளுக்கு தேவையான அளவில், 60 சதவீதமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. தட்டுப் பாடு ஏற்பட்டு கார்டுதாரர்களுக்கு அரை கிலோ மட்டுமே வினியோகிக்கப்பட்டது.
தற்போது வட மாநிலங்களில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. இதனால் மூடைக்கு 1,000 முதல் 1,500 ரூபாய் வரை குறைந்துள்ளது. இதனால், அதிகளவு கொள்முதல் செய்துள்ள அரசு, ரேஷன் கடைகளுக்கு கூடுதல் ஓதுக்கீடு செய்துள்ளது. இன்னும் சில மாதங்களுக்கு, ரேஷன் கடைகளில் தட்டுப்பாடு இன்றி துவரம் பருப்பு கிடைக்கும். வெளி சந்தையிலும் விலை குறையும் வாய்ப்பு உள்ளது.

**உரம் தயாரிப்பு பயிற்சி**

சிங்கம்புணரி : சிங்கம்புணரியில், விவசாய பல்கலை, செட்டிநாடு விவசாய ஆராய்ச்சி மையம் சார்பில் உரம் தயாரிப்பு பயிற்சி நடந்தது.
ஆராய்ச்சி மைய தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். விவசாய உதவி இயக்குனர் தொல்காப்பியன் வரவேற்றார். எஸ்.எஸ். கோட்டை, அணைக்கரைப் பட்டி, கிருங்காக் கோட்டை விவசாயிகள் பங்கேற்றனர். ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கண்ணன், கதிர்வேலன், பரமசிவன், தமிழ்செல்வன், பயிர் கழிவுகளிலிருந்து கம்போஸ்ட் தயாரிக்கும் தொழில் நுட்பம், மண்புழு தயாரித்தல், பயிர் உற்பத்தி திறன், தரம் பற்றி பயிற்சி அளித்தனர். விவசாய அலுவலர் தங்கப்பாண்டியன் நன்றி கூறினார்.

**நீர்வடிப்பகுதி மேம்பாடு விவசாயிகளுக்கு பயிற்சி**

ஆண்டிபட்டி : மறவபட்டியில் தேசிய மானாவாரி நீர் வடிப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் விவசாய துறை இணை இயக்குனர் நடராஜ் தலைமை வகித் தார்.
"ட்ரீம்ஸ்' தொண்டு நிறுவன செயலாளர் சாந்தகுமார் வரவேற்றார். விவசாயத்துறை உதவி செயற் பொறியாளர் ராஜ்மோகன், விரிவாக்க அலுவலர் பாலாஜி முன்னிலை வகித்தனர். முகாமில் இயற்கை வளங்களை பாதுகாப்பது, விளை நிலத்தை வலுவூட்டும் மேலாண்மையை உருவாக்குவது, இயற்கை பாசன முறைகளை பாதுகாப்பது, மானாவாரி

மற்றும் பாசன நிலங்களுக்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை குறைப்பது, விவசாய உற்பத்தி திறன் பெருக்குவது குறித்து விளக்கப்பட் டது. முகாம் ஏற்பாடுகளை ட்ரீம்ஸ் தொண்டு நிறுவனம், விவசாயத்துறையினர் செய்திருந்தனர். நீர் வடிப்பகுதி மேம்பாட்டு உறுப்பினர் ராஜாமணி நன்றி கூறினார்.

### மணிலா சாகுபடியில் அதிக மகசூல்: வேளாண்மை அதிகாரி யோசனை

ஆரணி: விவசாயிகள் மணிலா சாகுபடியில் அதிக மகசூல் பெற வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் யோசனை கூறியுள்ளார். ஆரணி அடுத்த தெள்ளூர் கிராமத்தில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது. நிகழ்ச்சிக்கு, வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் பால்கண்ணன் முன்னிலை வகித்தார். விதைச்சான்று அலுவலர் கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். பயிற்சியில், பண்ணை மகளிர் குழுவினர் மற்றும் தெள்ளூர், ராந்தம், அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து 50க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் பேசியதாவது: திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரே ஆண்டில் 2, 3 பருவங்களில் தொடர்ந்து சாகுபடி செய்வதால், நிலத்தில் இருந்து அதிக அளவு உரம் மற்றும் ஊட்டச்சத்துக்கள் பயிர்களால் உறிஞ்சப்படுகிறது. இதனால் காலப்போக்கில் சத்து குறைபாடுகளால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மகசூல் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, ஆரணி தாலுகாவில் பயிரிடப்படும் மணிலா பயிரில் இப்பிரச்னை அதிகமாக உள்ளது. இதை தவிர்க்க விவசாயிகள் மண் பரிசோதனை அடிப்படையில் உரங்களையும், ஏக்கருக்கு 5 கிலோ நூண்ணுட்ட சத்தை மணலுடன் கலந்து இடவேண்டும்.

நிலக்கடலையில் நன்கு திரட்சியான பருப்புகள் உருவாக சுண்ணாம்புச் சத்தும், கந்தக சத்தும் இடவேண்டும். அடியுரமாக ஜிப்சம் இடுவதோடு விதைத்த 45வது நாளில் 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய விலையில் வரப்பெற்ற ஜிப்சம், கிராமங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. விதையில்லா காய்கள் வராமல் இருக்க ஏக்கருக்கு 4 கிலோ போராக்ஸ் விதைத்த 45வது நாளில் ஜிப்சம் இடவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### விவசாயிகள் நன்கு பயிற்சி பெற்று எண்ணெய் பனை பயிர் செய்யலாம் காணை சேர்மன் கல்பட்டு ராஜா பேச்சு

விழுப்புரம் : விவசாயிகள் நன்கு பயிற்சி பெற்று எண்ணெய் பனை பயிரிட்டு பயன் பெற வேண்டும் என்று காணை சேர்மன் கல்பட்டு ராஜா தெரிவித்தார்.வேளாண்மைத் துறை சார்பில் எண்ணெய் பனை உற்பத்தி திட்டம் தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் காணையில் நடந்தது.காணை பி.டி.ஓ., அலுவலகத்தில் வேளாண்மைத் துறை மூலம் எண்ணெய் பனை உற்பத்தி திட்டத் தின்படி சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

துவக்க விழாவில் வேளாண்மை உதவி இயக்குனர் தாமோதரன் வரவேற்றார். ஊராட்சி தலைவர் பூரணி முன்னிலை வகித்தார். காணை ஒன்றிய சேர்மன் கல்பட்டு ராஜா தலைமை தாங்கி பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசினார். வேளாண்மை துணை இயக்குனர் கண்ணன், முன்னாள் பண்ணை வானொலி அலுவலர் துகிலி சுப்பிரமணியம், வேளாண்மை அலுவலர் ஆனந்தி, காவேரி பாமாயில் நிறுவன மண்டல ஒருங்கிணைப்பாளர் நாகப்பன், மாவட்ட பொறுப்பாளர் நவநீதகிருஷ்ணன் பயிற்சியளித்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய சேர்மன் கல்பட்டு ராஜா பேசுகையில், விவசாய உற்பத்திக்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத் தில் பயிற்சி பெற்று நமக்கு தேவையான எண்ணெய் தயாரிக்க

முடியும். 51 கிராமங்களில் இருந்து விவசாயிகள் வந்துள்ளீர்கள். இந்த எண்ணெய் பனை உற்பத்தி செலவு குறைவு. லாபம் அதிகம் கிடைக்கும். விவசாயிகள் நன்கு பயிற்சி பெற்று எண்ணெய் பனை பயிரிட்டு பயன்பெற வேண் டும். பயிரிட தேவையான கடன் வசதிகளை செய்து தர தயாராக உள்ளோம் என்றார். துணை வேளாண்மை அலுவலர் பலராமன் நன்றி கூறினார்.

### மக்காச்சோளம் விலை குறைவதால் இருப்பு வைப்பதில் தீவிரம்: உடுமலை விவசாயிகள் கவலை

உடுமலை : மக்காச்சோளம் சில நாட்களாக விலை குறைந்து வருவதால் இருப்பு வைத்து விற்பனை செய்ய விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். தமிழகத்தில் சராசரியாக 6.25 லட்சம் ஏக்கர் பரப்பில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுக்கு 15 டன் வரை மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதில், 70 சதவீத சாகுபடி காரீப் பருவத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மக்காச்சோளம் தேவைக்கு ஏற்ப உற்பத்தி இல்லாததால், ஆறு மாதமாக மக்காச்சோளத்திற்கு நல்ல விலை கிடைத்து வந்தது. 100 கிலோ ஒரு மூட்டை மக்காச் சோளம் 980 ரூபாய் வரை விற்று வந்தது. காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளம் அறுவடை சில மாதங்களாக நடந்து வரும் நிலையில், பற்றாக்குறை காரணமாக அறுவடை துவக்கத்திலேயே ஒரு மூட்டை 900 -950 ரூபாய் வரை விற்று வந்தது. அறுவடை துவங்கி, இரண்டு மாதமாக மக்காச்சோளத்திற்கு திருப்தியான விலை நிலவியது. தற்போது அறுவடை தீவிரமடைந்து, வரத்து அதிகரித்துள்ளதால், ஒரு வாரமாக மக்காச்சோளத்திற்கு விலை குறைந்து வருகிறது.

மேலும், கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்தும் மக்காச்சோளம் வரத்து நிலவுகிறது. இதனால், படிப்படியாக மக்காச்சோளம் விலை குறைந்து, நேற்றைய நிலவரப்படி மார்க்கெட் டெலிவரி விலை 840 முதல் 850 வரை இருந்தது. விவசாயி களுக்கு 800 ரூபாய் வரை விலை கிடைத்து வந்தது. மக்காச்சோளம் தேவையில் பற்றாக்குறை உள்ள நிலையில், இந்த ஆண்டு காரீப் பருவ மக்காச்சோள சாகுபடியில் மகசூலும் குறைந்துள்ளது. உற்பத்தியில் 20 முதல் 30 சதவீதம் வரை மகசூல் குறைந்துள்ளது. ஏற்கெனவே உள்ள பற்றாக்குறை மற்றும் மகசூல் குறைவு காரணமாக மக்காச்சோளத்தின் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. வரத்து அதிகரிப்பு காரணமாக விலை குறைந்தாலும், ஜூன், ஜூலை மாதங்களில் மக்காச்சோளத்திற்கு 1000 முதல் 1200 வரை விலை கிடைக்கும் வாய்ப்புள்ளது, இருப்பு வைத்தால் பயன் உள்ளது என வேளாண் பல்கலைக்கழகமும், ஆய்வு அடிப்படையில் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

மக்காச்சோள சாகுபடிக்கு உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், குறைந்த விலைக்கு விற்க மனமில்லாமலும், விலை ஏறும் வாய்ப்பு கருதியும், விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைக்கத் துவங்கியுள்ளனர்.தற்போது அறுவடையாகும் மக்காச்சோளத்தில் 80 சதவீதம் வரை மக்காச்சோளம் இருப்புக்கு போகிறது. இதனால், ஒழுங்கு முறை விற்பனை கூட கிடங்குகள் மற்றும் தனியார் குடோன்கள் வேகமாக நிரம்பி வருகிறது. மக்காச்சோள வணிகத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளும், தமிழகத்திலுள்ள பெரிய அளவிலான கறிக்கோழி உற்பத்தி நிறுவனங்களும் ஆறு மாதத்திற்கு தேவையான மக்காச்சோளம் இருப்பு வைத்துள்ளது.

### மொச்சை பயிர் அறுவடை தீவிரம்

உடுமலை : உடுமலை கொங்குரார் குட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளில் மொச்சை பயிர் அறுவடை தீவிரமாக நடக்கிறது.விவசாயிகள் கூறியதாவது:கொங்குரார் குட்டையில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் மொச்சை சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ளது. ஆனால், எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை. புழுத்தாக்குதல் மற்றும் மழை போன்ற காரணங்களினால், மகசூல் பாதித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏக்கருக்கு ஏழு மூட்டை வரை கிடைத்த மொச்சை தற்போது நான்கு மூட்டை அளவே டைக்கிறது. நல்ல விலை கிடைக்காத நிலையில் மகசூலும் குறைந்துள்ளதால், நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது என்றனர். மொச்சை அறுவடை பணிகள் தற்போது நடந்து வருகிறது. கூலி ஆட்கள் பற்றாக்குறையால் மொச்சை அறுவடை பணியில் தாமதம் ஏற்படுகிறது.

### உள்ளூர் சந்தையில் சீராக இருக்கும் அரிசி விலை: தானியங்கள் விலை உயர்கிறது

உடுமலை : வரத்து அதிகரித்ததால், உள்ளூர் சந்தையில் சில வாரங்களுக்கு முன் குறைந்த அரிசி விலை, நிலையாக உள்ளது. அறுவடை சீசனிலும் வரத்து இல்லாததால் தானியங்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.உடுமலை பகுதிக்கு அரிசி ரகங்கள் கர்நாடகா, காரைக்குடி, காங்கேயம் பகுதிகளிலிருந்து வரத்து உள்ளது. டிசம்பரில் வெளிமாநில மற்றும் உள்ளூர் வரத்து குறைந்து அரிசி விலை வேகமாக உயர்ந்தது.

நெல் சாகுபடியில் தை சீசன் அறுவடை துவங்கியதும், உள்ளூர் சந்தைக்கு வரத்து அதிகரித்து விலை குறைந்தது. கர்நாடகாவிலிருந்து ராஜபோகம், பி.பி.டி., ஆகிய ரகங்களும், அதிசயபொன்னி, ஏ.டி.டி., 36, வெள்ளை பொன்னி உட்பட ரகங்கள் காரைக்குடி, காங்கேயம், ஆனைமலை பகுதிகளிலிருந்து விற்பனைக்காக வாங்கி வரப்படுகிறது. உள்ளூர் சந்தையில், கடந்த டிசம்பரில் 25 கிலோ மூட்டை ராஜபோகம் அரிசி 1,020 ரூபாய்க்கும், பி.பி.டி., 850 ரூபாய், அதிசயபொன்னி 550, வெள்ளை பொன்னி 1,040 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வரத்து அதிகரித்ததும், அனைத்து ரக அரிசியின் விலையும் திடீரென குறைந்தது. 25 கிலோ மூட்டைக்கு 200 ரூபாயிலிருந்து 400 ரூபாய் வரை விலை சரிவு இருந்தது. தற்போது, உள்ளூர் சந்தையில் 25 கிலோ மூட்டை ராஜபோகம் 820 ரூபாயாகவும், பி.பி.டி., 650., வெள்ளை பொன்னி 850 ரூபாயாகவும் குறைந்தது. அதிசய பொன்னியின் விலையும் 300 ரூபாய் வரை குறைந்துள்ளது.

வெளிமாநில மற்றும் மாவட்ட வரத்து உடுமலைக்கு சீராகவே உள்ளது. இந்த விலை கடந்த சில வாரங்களாக எந்த மாற்றமும் இல்லாமல் நிலையாக உள்ளது. அடுத்த நான்கு மாதங்களுக்கு அரிசி விலையில் பெரிய மாற்றம் இருக்காது என சில்லரை வியாபாரிகள் தெரிவித்தனர். தானியங்கள் விலை: தானியங்கள் விலை கடந்த ஒரு மாதமாக நிலையில்லாமல் ஏற்ற இறக்கத்தில் உள்ளது. உடுமலை பகுதியில் தானியங்கள் சாகுபடியில் போதிய விளைச்சல் இல்லாததால் பெரும்பாலும் வெளிமாவட்டங்களிலிருந்தே வரத்து உள்ளது.

வறுகடலை கிலோ 46 ரூபாயிலிருந்து 50 ரூபாயாகவும், துவரம்பருப்பு 68 ரூபாயாலிருந்து 80 க்கும், உளுத்தம்பருப்பு(பர்மா) கிலோவிற்கு 12 ரூபாய் உயர்ந்து 80 ரூபாய்க்கும், தட்டை பயறு-44 கொள்ளு-46 ரூபாயாக்கும் விற்பனையாகிறது. இந்த பயறு ரகங்கள் அனைத்தும் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து விலை அதிகரித்து வருகிறது. கொத்தமல்லி வரத்து குறைவாக உள்ளதால் ஒரே மாதத்தில் 14 ரூபாய் உயர்ந்து 64 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரமிளகு விலை 60 ரூபாயிலிருந்து 80 ரூபாயாக உயர்ந்துள்ளது. பாசிப்பயறு விலை மட்டும் சிறிது குறைந்து கிலோ 68 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எண்ணெய் வகைகளின் விலையில் கடந்த சில மாதங்களாக மாற்றம் இல்லை. அஸ்காவின் விலை 41 ரூபாயிலிருந்து 35.50 ரூபாயாக குறைந்துள்ளது. தானிய சாகுபடி பரப்பு குறைந்துள்ளதால் அறுவடை சீசனிலும் விலை குறைவதில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

### சூடுபிடிக்கும் இளநீர் விற்பனை: தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

பல்லடம் : குளிர், பனி காரணமாக, மந்தமாக இருந்த இளநீர் விற்பனை, தற்போது அடித்து வரும் கடும் வெயிலால் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது. தோப்புகளில் இளநீர் ஒன்றுக்கு கொள்முதல் விலை ஒரு ரூபாய் உயர்ந்துள்ளது;

பல்லடம், சுல்தான்பேட்டை தென்னை விவசாயிகள் குளிர்ச்சி அடைந்துள்ளனர்.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது.

இப்பகுதிகளில் உள்ள தென்னந்தோப்புகளில் விளையும் இளநீர், கோவை மற்றும் ஒட்டன்சத்திரம், திருப்பூர், தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த இரு மாதங்களாக, தமிழகம் முழுவதும் கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவு இருந்ததால், இளநீர் பருக பொதுமக்கள் விரும்பவில்லை. இதனால், வழக்கத்தை விட குறைந்த எண்ணிக்கையில் இளநீரை வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.கடந்த இரு வாரங்களாக, குளிர், பனி மறைந்து, தமிழகம் முழுவதும் வெயில் அடிக்கத் துவங்கியுள்ளது. இதன்காரணமாக இளநீர் விற்பனை சூடுபிடித்து வருகிறது.

மந்தமாக இருந்த இளநீர் விற்பனை, தற்போது அதிகரிக்கத் துவங்கியதால், கொள்முதல் விலையை வியாபாரிகள் உயர்த்தியுள்ளனர். காய் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தி, ஏழு ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர்.கடந்த மாதம் ஐந்து ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட, சிறிய அளவிலான இளநீரை, தற்போது ஆறு ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். கொள்முதல் விலை உயர்வு, தென்னை மரத்தை பராமரித்து உரமிடும் செலவை ஈடுகட்டும் வகையில் உள்ளதால், பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை பகுதி தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### *உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 17.87%–ஆக உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நாட்டின் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், பிப்ரவரி 20–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 17.87 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 17.58 சதவீதமாக இருந்தது.*
*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றின் விலை அதிகரித்திருந்தது.*
*இருப்பினும், எரிபொருள், மின்சாரம், மசகு எண்ணெய் ஆகியவற்றின் விலை சற்று குறைந்திருந்தது.*
*இந்த நிலையில், சென்ற வெள்ளிக்கிழமை அன்று அறிவிக்கப்பட்ட மத்திய பட்ஜெட்டில், பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் மீதான சுங்கவரி 2.5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தி வரியும் லிட்டருக்கு ரூ.1 உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால், அடுத்த வாரத்தில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் சென்ற ஜனவரி மாதத்தில் 8.56 சதவீதமாக உயர்ந்திருந்தது. இது, டிசம்பர் மாதத்தில் 7.31 சதவீதமாக குறைந்து காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

## *மூலிகை தாவரங்களில் உள்ள மருத்துவ குணங்கள் என்ன? சென்னையில் 3 நாள் சர்வதேச கருத்தரங்கம்*

*சென்னை, மார்ச்.5–*

*மூலிகை தாவரங்களில் உள்ள மருத்துவ குணங்கள் என்ன? என்பது குறித்தான சர்வதேச கருத்தரங்கம் சென்னையில் நேற்று தொடங்கியது.*

*சர்வதேச கருத்தரங்கம்*

*சென்னை பச்சையப்பன் கல்லூரி தாவரவியல் துறை சார்பில், மருத்துவ தாவரங்கள் மற்றும் மூலிகை மருந்துகள் குறித்த சர்வதேச கருத்தரங்கம், கல்லூரி அரங்கில் 3 நாட்கள் நடைபெறுகிறது. இந்த கருத்தரங்கத்தின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.*

*விழாவுக்கு பச்சையப்பன் அறக்கட்டளை தலைவரும், வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தருமான ஐசரி கே.கணேஷ் தலைமை தாங்கியதுடன் விழா புத்தகத்தையும் வெளியிட்டார்.*

*இந்த நிகழ்ச்சியில், பச்சையப்பன் கல்லூரி முதல்வர் ருக்மணி, தாவரவியல் துறை தலைவர் சி.ஆர்.போஜன், நெப்ராஸ்கா பல்கலைக்கழக பேராசிரியர் ச.மாதவன், கருத்தரங்கு செயலாளர் த.சேகர் உள்பட அறிவியல் அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.*

*ஆராய்ச்சி கட்டுரைகள்*

*3 நாட்கள் நடைபெறும் இந்த கருத்தரங்கத்தில், மூலிகை தாவரங்களில் உள்ள மருத்துவ குணம் குறித்தும், மூலிகை மருத்துவம் குறித்தும், மருத்துவ தாவரங்களின் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள் குறித்தும், அதற்கான தீர்வுகள் குறித்தும் விவாதிக்கப்படுகிறது.*

*மேலும், 200–க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் இந்த கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. பல்வேறு கூறுகளை தாங்கியுள்ள இந்த ஆராய்ச்சி கட்டுரைகள் பல நிலைகளில் விவாதிக்கப்படுகிறது. கருத்து பரிமாற்றமும் நடைபெறுகிறது.*

*இந்த கருத்தரங்க தொடக்க விழாவில், மத்திய குடும்ப மற்றும் நல்வாழ்வுத்துறை இணை மந்திரி காந்தி செல்வன் கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால், அவர் கடைசி நேரத்தில் வராமல் போனது ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.*